www.agaram.lk

# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018
## வணிகக்கல்வியும் கணக்கீடும்

**தரம் 11** **நேரம்:- 1 மணித்தியாலம்**

**சுட்டெண் :-......................... பகுதி 1** **புள்ளி :- .........**

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

- பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

சூர்யா என்பவர் சுத்தமான முறையில் குளிர்பானம், ஐஸ்கிறீம், சர்பத், பழச்சாறு என்பவற்றை தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை " சக்தி குளிர்களி விற்பனை நிலையம்" என்ற பெயரில் நடாத்தி வருகின்றார்.

1. இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித வேவை யாது?
   (1) இருப்பிடம் (2) உணவு (3) உடை (4) போக்குவரத்து

2. இவ்வணிகத்தினால் வழுங்கப்படும் சோடா, ஐஸ்கிறீம், சர்பத், பழச்சாறு ஆகியவற்றை எவ்வாறு அழைக்க முடியும்.
   (1) உள்ளீடுகள் (2) உற்பத்திப் பொருட்கள் (3) போக்குவரத்து (4) மூலதனம்

3. பின்வருவன மேலுள்ள சம்பவம் தொடர்பான சில கூற்றுகளாகும்
   A- இவ் வணிகம் பல்வேறுபட்ட மனித விருப்பங்களை உருவாக்கியுள்ளது.
   B- சூர்யா நேர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்.
   C- இது ஒரு தனியார்துறை வணிகமாகும்
   D- இவ் வணிகம் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.
   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றுக்கள்
   (1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) B யும் D யும்

4. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் "சக்தி குளிர்களி விற்பனை நிலையம்" தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) இவ்வணிகத்தின் மீதான சூர்யாவின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
   (2) இவ்வணிகம் சட்ட ஆளுமையுடையதாகும்.
   (3) இவ்வணிகத்தின் பெயரை பதிவு செய்வது கட்டாயமானதாகும்.
   (4) இது சேவைகளை வழங்கும் வணிகமாகும்.

5. சக்தி குளிர்களி விற்பனை நிலையமானது தனது உற்பத்திப்பொருட்களை நடமாடும் வாகனத்தில் கொண்டு சென்று விற்பனையை மேற்கொள்வதானது எந்த சந்தைப்படுத்தல் மாறிக்குள் உள்ளடங்குகின்றது.
   (1) இடம் (2) உற்பத்திப்பொருள் (3) மேம்படுத்தல் (4) விலை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

6. நிரல் A ஆனது வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் நபர்களையும், நிரல் B யானது அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் காட்டுகின்றது.

| A | B |
|---|---|
| 1. கடன் வழங்கும் நிறுவனங்கள்<br>2. முகாமையாளர்கள்<br>3. ஊழியர்கள்<br>4. உரிமையாளர்கள் | P- மூலதனத்தை ஈடுபடுத்தி இலாபத்தை உழைத்தல்<br>Q- தொழிற்பாதுகாப்பு<br>R- கடன்களை உரிய காலத்தில் மீளப்பெறல்<br>S- சிறந்த தீர்மானம் எடுத்தல் |

A இனையும் B இனையும் தொடர்புபடுத்தும்போது சரியான இணைப்பினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) RSQP (2) PQRS (3) QRSP (4) RSPQ

7. பின்வருவனவற்றில் எச்சூழல் காரணியை புறச்சூழல் காரணியாகக் கருதமுடியாது?
(1) ஊழியர்கள் 2) வாடிக்கையாளர் 3) வழங்குனர் 4) அரசியல் சூழல்

8. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) பலம் - முகாமையாளரின் அனுபவங்கள்
(2) பலவீனம் - பணியாளரின் எதிர்மறை மனப்பாங்கு
(3) வாய்ப்பு - புதிய நகரங்களை உருவாக்கல்
(4) அச்சுறுத்தல் - வணிகம் பற்றிய அறிவு உரிமையாளருக்கு போதுமானதாக இல்லாதிருத்தல்

9. இலங்கை துறைமுக அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பொதுவான சட்டம் அல்லது விஷேட சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. அதனடிப்டையில் மேற்கூறிய நிறுவனங்கள் எவ்வணிக அமைப்பினுள் உள்ளடங்குகின்றன?
(1) கூட்டுறவுச் சங்கம் (3) அரச திணைக்களங்கள்
(2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் (4) அரச கூட்டுத்தாபனங்கள்

10. பின்வரும் வணிகம் தொடர்பான சட்டங்களில் பங்குடமை வணிகம் ஒன்றுடன் தொடர்புபடாத சட்டத்தினைக் குறிப்பிடுக.
(1) 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்
(2) 2007 ஆம் ஆண்டு 7 ம் இலக்க கம்பனிச் சட்டம்
(3) 1840 ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்புச் கட்டளைச் சட்டம்
(4) 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம்

11. சில்லறை வியாபாரத்தின் பண்பு அல்லாதது,
(1) நுகர்வோனுக்கு மிக அண்மித்ததாக இருத்தல்
(2) ஒப்பீட்டு ரீதியில் பொருட்களின் அலகுக்கான விலை குறைவாக இருத்தல்
(3) இறுதி நுகர்விற்காக பொருட்களை விற்பனைசெய்தல்
(4) பல்வகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படல்

12. வணிகரொருவர் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்ய விரும்புவாராயின் வணிக வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட வேண்டிய கணக்கு,
(1) சேமிப்புக் கணக்கு (3) நிலையான மற்றும் சேமிப்புக் கணக்கு
(2) நடைமுறைக் கணக்கு (4) மேற்கூறிய எவையுமல்ல



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

13. இழப்பீட்டுத் தத்துவம் பின்வரும் எவ்வகைக் காப்புறுதிக்கு பொருத்தமற்றது?
(1) தீ அபாயக் காப்புறுதி
(2) கப்பல் காப்புறுதி
(3) ஆயுள் காப்புறுதி
(4) 3 ஆம் நபர் காப்புறுதி

14. போக்குவரத்தின் அடிப்படைப் பண்புகள்
(1) வழி, ஊடகம், மின்சாரம், தரிப்பிடம்
(2) வழி, ஊடகம், வலு, தரிப்பிடம்
(3) வழி, புகையிரதம், மின்சாரம், விமான நிலையம்,
(4) வழி, ஊடகம், பெற்றோல், விமானநிலையம்

15. வருடாந்த பரிசளிப்பு விழாவை வெற்றிகரமாக நடாத்துவதற்காக பாடசாலை அதிபரால் குழு அமைக்கப்பட்டு அவற்றுக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.
இது முகாமைத்துவச் செயன்முறையின் எந்தக் கருமத்திற்கு உரித்தாகும்?
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) தலைமைவகித்தல் (4) கட்டுப்படுத்தல்

16. முதலீட்டு வழிமுறை ஒன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணி எது?
(1) நோக்கம் (2) இடர் (3) அனுகூலங்கள் (4) மேற்கூறிய யாவும்

17. கடந்த காலக் கொடுக்கல், வாங்கல் அல்லது நிகழ்வொன்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்படவேண்டிய தொகைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) நடைமுறைச் சொத்துக்கள் (2) உரிமை (3) பொறுப்புக்கள் (4) செலவுகள்

18. கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.
சொத்துக்கள் = உரிமையாளர் உரிமை + பொறுப்புக்கள்
+250000 = +250000
மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்,
(1) மூலதனம் இடப்பட்டது ரூ 250000
(2) பொருட் கொள்வனவு ரூ 250000
(3) பொருட்கள் கடனுக்கு கொள்வனவு ரூ 250000
(4) கடன்கொடுத்தோர்க்கு காசுக்கொடுப்பனவு ரூ 250000

19. வியாபார நிறுவனமொன்றின் காசாக செலுத்திய தொலைபேசிக்கட்டணம் ரூ 8000 தொடர்பில் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை சரியான முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| | சொத்துக்கள் | = | உரிமையாளர் உரிமை | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 1) | +8000 | = | +8000 | - |
| 2) | – 8000 | = | - 8000 | - |
| 3) | - | = | +8000 | - 8000 |
| 4) | - | = | - 8000 | +8000 |

20. பேரேட்டில் கடன் கொடுத்தோர் கணக்கு ……1………… இருக்கின்றபோது, பற்றுக் கணக்கு ……2………… காணப்படுகின்றது. மேலே தரப்பட்ட 1, 2 ஆகியவற்றுக்கு மிகவும் பொருத்தமான சொற்களை சரியான ஒழுங்குமுறையில் காட்டும் விடை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(1) ஒரு பொறுப்புக் கணக்காக, ஒரு வருமானக் கணக்காக
(2) ஒரு பொறுப்புக் கணக்காக, ஒரு செலவுக் கணக்காக
(3) ஒரு பொறுப்புக் கணக்காக, ஒரு உரிமைக் கணக்காக
(4) ஒரு சொத்துக் கணக்காக, ஒரு செலவுக் கணக்காக

21. 'செலவு அதிகரித்தல், வரவு குறைதல்' எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக் காட்டும் கணக்கு
(1) கொடுத்த கழிவுக் கணக்கு
(2) கொள்வனவுக் கணக்கு
(3) காசுக் கணக்கு
(4) மூலதனக் கணக்கு

22. கீழே X நிரலில் முதன்மையேடுகளும், Y நிரலில் கொடுக்கல் வாங்கல்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. காசேடு<br>2. கொள்வனவு நாளேடு<br>3. விற்பனை நாளேடு<br>4. பொது நாட்குறிப்பேடு | A. ரூ 10000 பெறுமதியான இயந்திரம் கடனுக்கு கொள்வனவு<br>B. ரூ 20000 பெறுமதியான சரக்கு கடனுக்கு விற்பனை<br>C. ரூ 40000 பெறுமதியான சரக்கு கடனுக்கு கொள்வனவு<br>D. ரூ 30000 சம்பளம் கொடுத்தது |

X நிரலில் காட்டப்பட்டுள்ள முதன்மையேட்டுக்கு பொருத்தமாக Y நிரலில் கொடுக்கல் வாங்கல்களை இணைக்கும்போது காணப்படும் விடையினைத் தெரிவு செய்க.

(1) A , D, C, B (2) D, C, B, A (3) C, B, A, D (4) D, A, B, D

23. ரூ 400 ஆல் வணிகமொன்றின் கொடுத்தகழிவு அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் கொடுக்கல்வாங்கலைத் தெரிவு செய்க.
(1) கடன்கொடுத்தோரான தேவனுக்கு செலுத்தவேண்டிய ரூ 4000, 10% கழிவில் செலுத்தப்பட்டது.
(2) ரூ 2000 குறிக்கப்பட்ட பொருளொன்று ரூ 1200 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
(3) ரூ 1000 தரவேண்டிய கடன்பட்டோரான ராதிகாவிடமிருந்து ரூ 400 பெறப்பட்டது.
(4) ரூ 4000 தரவேண்டிய கடன்பட்டோரான அவினாஷிடமிருந்து 10% கழிவில் காசு பெறப்பட்டது.

24. சாரதா வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ 2000 ஆகும். 2018 பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள் ரூ 1800 ஆகக் காணப்பட்டது. மார்ச் 1 ஆம் திகதி ரூ 2300 மீள நிரப்பப்பட்டது. சாரதா வணிகத்தின் சில்லறைக் காசேடு தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) மார்ச் மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ 2500 ஆகும்.
(2) பெப்ரவரி 28 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த தொகை ரூ 500 ஆகும்.
(3) பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள் ரூ 2300 ஆகும்.
(4) மார்ச் மாதத்திலிருந்து சில்லறைக் காசேடு நிதி அதிகரித்த தொகை ரூ 300 ஆகும்.

25. 31.01.2018 இல் வருண் நிறுவனத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ 14600 எனக் காட்டியது. ஆனால் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்று வேறோர் மீதியைக் காட்டியது. இதற்கான காரணங்கள் கீழ் வருமாறு.
- ❖ கடன்பட்டோரினால் நேரடியாக வங்கியில் வைப்புச்செய்த தொகை ரூ 1800
- ❖ வங்கிக்கட்டணம் ரூ 400
- ❖ சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 3400



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

❖ தீர்வையாகாத காசோலைகள் ரூ 3000

31.01.2018 இல் வங்கிக்கூற்று மீதி

(1) ரூ 16000 (2) ரூ 19400 (3) ரூ 16400 (4) ரூ 16400

26. தொங்கல் கணக்கு என்பது,
   (1) ஒரு தற்காலிகமான கணக்கு (2) ஒரு செலவுக் கணக்கு
   (2) ஒரு பொறுப்புக் கணக்கு (4) ஒரு சொத்துக் கணக்கு

27. கொடுத்தகழிவுக் கணக்கு மீதி ரூ 3000 பரீட்சைமீதியில் செலவுப்பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. இத்தவறினை திருத்தும்போது,
   (1) தொங்கல் கணக்கில் எப்பதிவும் இடம்பெறாது.
   (2) ரூ 6000 செலவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.
   (3) ரூ 6000 வரவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.
   (4) ரூ 3000 வரவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 28, 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

2017 ஆம் ஆண்டில் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 100 ஆகும், அங்கத்தவர்களுக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ 50 ஆகும். 2017 ஆம் ஆண்டினபோது 80 அங்கத்தவர்கள் வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள்.

28. 31.12.2017 இல் உள்ளவாறு பெற்றுக் கொள்ள வேண்டிய அங்கத்துவக் கட்டணம் எவ்வளவு?
   (1) ரூ 1000 (2) ரூ 4000 (3) ரூ 12000 (4) ரூ 50000

29. 2017 ஆம் ஆண்டிற்கான இவ்விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த அங்கத்துவக் கட்டண வருமானம் எவ்வளவு?
   (1) ரூ 1000 (2) ரூ 12000 (3) ரூ 60000 (4) ரூ 48000

30. மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிடுவதற்கான சரியான சமன்பாடாக அமைவது,
   (1) நேர் மூலப் பொருட்கிரயம் + நேர்கூலிக் கிரயம்
   (2) நேரில் மூலப்பொருள் கிரயம் + மூலக்கிரயம்
   (3) நேர்மூலப் பொருட்கிரயம் + மூலக்கிரயம்
   (4) மூலக்கிரயம் + உற்பத்தி மேந்தலைக் கிரயம்

31. உற்பத்தி மேந்தலைக் கிரயத்தில் ஒரு செலவாகக் கருதப்படக் கூடியது,
   (1) தனியுரிமைக் கட்டணம் (3) மூலப் பொருட்கிரயம்
   (2) மின்சாரக் கட்டணம் (4) மேற்கூறிய யாவும்

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 32, 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

மோகன் வணிக நிறுவனத்தில் 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டில் பெறப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| விற்பனை | 150000 |
| இருப்பு (01.01.2017) | 45000 |
| இருப்பு (31.12.2017) | 30000 |
| கொள்வனவு | 88000 |
| உட்சுமைகூலி | 2000 |

32. மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் 31.12.2017 இல் முடிவுற்ற வருடத்திற்கான விற்பனைக் கிரயம்,
   (1) ரூ 105000 (2) ரூ 90000 (3) ரூ 40000 (4) ரூ 103000

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

33. 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவனத்தின் மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம்
(1) ரூ 135000 (2) ரூ 105000 (3) ரூ 90000 (4) ரூ 45000

34. வணிகமொன்றின் நிதி நிலைமையைக் காட்டுவதற்காக குறித்ததொரு தினத்தில் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை,
(1) பரீட்சைமீதி (2) இலாப நட்டக் கூற்று (3) காசேடு (4) நிதி நிலைமைக் கூற்று

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
காயத்திரி வியாபாரத்தின் 31.12.2017 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு:-

| | ரூபா |
|---|---|
| இருப்பு 01.01.2017 | 10000 |
| கொள்வனவுகள் | 82300 |
| விற்பனை | 156700 |
| உட்சுமைகூலி | 7600 |
| கடன்பட்டோர் | 20000 |
| கடன்கொடுத்தோர் | 15000 |
| 12% வங்கிக் கடன் | 50000 |
| தளபாடம் (கொள்விலையில்) | 60000 |
| விநியோக வான் (கொள்விலையில்) | 100000 |
| சம்பளம் | 12000 |
| வங்கிக் கடன் வட்டி செலுத்தியது | 3000 |
| வாடகை செலுத்தியது | 9000 |
| காசுமீதி | 15400 |

மேலதிக தகவல்கள்:-

❖ இறுதியிருப்பு 31.12.2017 ரூ 10500
❖ மாத வாடகை ரூ 1000
❖ தளபாடங்களுக்கும், விநியோக வானிற்கும் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

35. 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்கு விற்றசரக்கின் கொள்விலையின் பெறுமதி
(1) ரூ 99 900 (2) ரூ 67 300 (3) ரூ 89 400 (4) ரூ 92 300

36. 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மொத்த இலாபம்
(1) ரூ 92 300 (2) ரூ 99 900 (3) ரூ 89 400 (4) ரூ 67 300

37. 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்காக குறிப்பிட்ட வணிகத்தினால் இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட வேண்டிய வாடகையின் பெறுமதி
(1) ரூ 21000 (2) ரூ 12 000 (3) ரூ 9000 (4) ரூ 18000

38. 31.12.2017 இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலாப நட்டக் கணக்கில் காட்டப்படவேண்டிய நிர்வாகச் செலவுகளின் பெறுமதி
(1) ரூ 27000 (2) ரூ 24000 (3) ரூ 30000 (4) ரூ 21000

39. 31.12.2017 இல் உள்ளபடியான ஐந்தொகையில் காணப்படும் மொத்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி
(1) ரூ 204900 (2) ரூ 195400 (3) ரூ 45900 (4) ரூ 35400

40. 31.12.2017 இல் சென்மதியாகவுள்ள வங்கிக்கடன் வட்டியின் பெறுமதி,
(1) ரூ 6000 (2) ரூ 3000 (3) ரூ 9000 (4) ரூ 5000

(1×40= 40 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

**தரம் 11** **நேரம்:- 2 மணித்தியாலம்**

**சுட்டெண் :-........................... பகுதி 11 புள்ளி :- .........**

❖ முக்கியம்
அறிவுறுத்தலுக்கமைய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளி வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

❖ முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
❖ விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**(01) கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு 1 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

காணிச் சொந்தக்காரரும், பழத்தோட்ட பயிர்ச்செய்கையாளரும் விவசாயப்பாடத்தில் பட்டத்தை பெற்றவருமான ரிஷோபன் என்பவர் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பழத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றார். அவர் தனது பழ உற்பத்திகளை தனது பிரதேசத்தில் காணப்படும் பழங்களை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு விநியோகிப்பதுடன், தனது வீட்டுக்கருகில் சிறிய வியாபார நிலையமொன்றை அமைத்து பழங்களை விற்பனை செய்து வருகின்றார்.

உணவு பதனிடல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவரான திருக்குமரன் என்பவர் ரிஷோபனின் வணிகத்திடமிருந்து பழவகைகளைப் பெற்று பழப்பாகு (Fruit Jam) உற்பத்தி செய்து போத்தலில் அடைத்து சிறியளவிலான சில்லறை வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை “குமரன் பழப்பாகு உற்பத்தி நிறுவனம்” என்ற பெயரில் பதிவு செய்து நடாத்தி வருகின்றார்.

திருக்குமரனின் வணிகத்தில் 01 ஜனவரி 2018 திகதியில் உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்களின் விபரம் வருமாறு:-

- காசு ரூ 85000
- கடன்பட்டோர் ரூ 35000
- கடன்கொடுத்தோர் ரூ 30000
- உற்பத்தி உபகரணங்கள் ரூ 120000
- 12% வங்கிக்கடன் ரூ 200000
- விநியோக வான் ரூ 480000

2018 ஜனவரி மாதத்தின்போது குமரன் பழப்பாகு உற்பத்தி நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல்கள் வருமாறு:-

- பழங்கள் கொள்வனவு காசு ரூ 50000 கடன் ரூ 30000
- பழப்பாகு போத்தல்கள் விற்பனை காசு (500 அலகுகள்) ரூ 60000 கடன் (600 அலகுகள்)
- கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ 15000
- கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூ 8000

ஜனவரி மாதத்தின்போது பழப்பாகு உற்பத்தி செய்து போத்தலில் அடைப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் வருமாறு:-

- தொழிற்சாலை வாடகை ரூ 4000
- தொழிற்சாலை காப்புறுதிக் கட்டணம் ரூ 2000
- மின்சாரக்கட்டணம் ரூ 5000
- ஊழியர் சம்பளம் ரூ 18000

❖ விநியோக வான், உற்பத்தி உபகரணங்களுக்கு ஜனவரி மாதத்தில் காணப்படும் தொடக்க மீதிகளுக்கு வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடப்படல் வேண்டும்.
❖ 31.12.2018 இல் எதுவித இருப்பும் காணப்படவில்லை.
❖ வங்கிக்கடன் வட்டி ஒவ்வொரு மாதமும் முழுமையாக செலுத்தப்படுகின்றது.
❖ கிரயத்தில் 20% இலாபம் வைத்து பொருளுக்கான விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது.

இயற்கையான முறையில் பழப்பாகு உற்பத்தி செய்தமையால் குமரனின் உற்பத்திப் பொருட்களுக்கு கேள்வி அதிகரித்தது. இதனால் மேலதிகமாக இரு ஊழியரை ஆட்சேர்ப்பு செய்ததுடன் தனது உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விளம்பரமொன்றை மேற்கொள்ளவும் தீர்மானித்தார். மேலும் எதிர்காலத்தில்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

பழரசம், குளிர்பான நிலையங்களுக்கான பழக்கழவை உற்பத்திகளை மேற்கொண்டு வணிகத்தை விரிவுபடுத்த தீர்மானித்தார்.

(1) அ) குமரன் பழப்பாகு உற்பத்தி நிறுவனத்தை பதிவு செய்து கொள்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக.
ஆ) திருக்குமரன் தனது வணிகம் தொடர்பாக எதிர்கொள்ளத்தக்க சவால் (அச்சுறுத்தல்) ஒன்றைக் குறிப்பிடுக.

(2) ரிஷோபன் மொத்த வியாபாரத்திலும், சில்லறை வியாபாரத்திலும் ஈடுபடுகின்றார்.
அ) மேலே தரப்பட்ட கூற்றுடன் உடன்படுகின்றீரா?
ஆ) உமது விடைக்கான காரணங்கள் தருக.

(3) இவ்விடய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கருமம், சந்தைப்படுத்தல் கலவை ஆகிய ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணம் தருக.

(4) அ) குமரன் உற்பத்தி வணிகம் கவனம் செலுத்த வேண்டிய இரண்டு புறச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.
ஆ) மேற்படி வணிகம் கவனம் செலுத்த வேண்டிய அக்கறை கொள்ளும் தரப்பினர் இருவரைக் விடய ஆய்விலிருந்து குறிப்பிடுக.

(5) அ) 01 ஜனவரி 2018 இல் உள்ளவாறு குமரன் பழப்பாகு உற்பத்தி வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?
ஆ) மேற்படி வணிகத்தில் 01.01.2018 இல் காணப்பட்ட மொத்த நடைமுறைச்சொத்தின் பெறுமதி எவ்வளவு?

(6) அ) 2018 ஜனவரி மாதத்திற்கான குமரன் பழப்பாகு உற்பத்தி வணிகத்தில் காணப்பட்ட சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கணிப்பிடுக.
ஆ) மேற்படி வணிகத்தினால் பேணவேண்டிய மூலப்பதிவேடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றிற்குரிய மூலஆவணங்கள் ஒவ்வொன்று தருக.

(7) 2018 ஜனவரி மாத இறுதியில் குமரன் வணிகத்தின் காசுமீதியைக் கணிப்பிடுக.

(8) அ) 31.12.2018 இல் குமரன் பழப்பாகு உற்பத்தி வணிகத்தில் காணப்படும் ஏனைய நேரில் செலவுகளுக்கு இரண்டு உதாரணம் தருக.
ஆ) குறிப்பிட்ட வணிகத்தில் உற்பத்திக் கிரயக் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத இரண்டு செலவினங்களைக் குறிப்பிடுக.

(9) ஜனவரி மாதத்தில் குமரன் வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பழப்பாகு போத்தல் ஒன்றிற்கான கிரயம் எவ்வளவு?

(10) மேற்குறிப்பிட்ட வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பழப்பாகு போத்தல் ஒன்றிற்கான விற்பனை விலை யாது?

(10 × 2 = 20 புள்ளி)

## பகுதி 11
## (வணிகக்கல்வி)
### இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**வினா இல 02**

(1) வணிகம் ஒன்றின் பொதுவான நோக்கங்கள் இரண்டினையும் துணை நோக்கங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(2) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா எனக் குறிப்பிடுக.

i. மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமாக நிறைவு செய்து கொள்ள வேண்டியவைகள் மனித தேவைகள் எனப்படும்.

ii. வணிகமொன்றின் மூலம் நுகர்வோரது தேவைகள், விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக நுகர்வோருக்கு வழங்கப்படும் ஒரு செயற்பாடு அல்லது செயன்முறை வியாபாரம் எனப்படும்.

iii. பொருட்கள், அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களுக்கு தேவைப்படும் வளங்கள் உற்பத்திக் காரணிகள் எனப்படும்.

iv. வணிகமொன்றின் நிலைப்புத் தன்மையை நிர்ணயிக்கும் மிக முக்கியமான காரணி வாடிக்கையாளர் ஆவார். (02 புள்ளிகள்)

(3) மாலா என்பவர் தனது வீட்டிலேயே அலங்காரப் பூச்செடி வகைகளை தன்னிடம் உள்ள உபகரணங்களின் உதவியுடன் வளர்த்து விஷேட நிகழ்வுகளுக்கான மலர்களையும் பூக்கன்றுகளையும் உதவியாளர் ஒருவரின் துணையுடன் விற்பனை செய்து வருகின்றார்.

i. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் இரண்டு உற்பத்திக் காரணிகளைக் குறிப்படுக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

ii. நீர் மேலே 3) i. இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

(4) கரன் என்பவர் நகரின் மத்தியில் தனது உதவியாளர் ஒருவரின் துணையுடன் மோர் மற்றும் இயற்கையான முறையில் (இரசாயனம் சேர்க்கப்படாத ) உற்பத்தி செய்யப்பட்ட இலைவகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சியினை விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

i. இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள கரன் வணிகத்தின் அகச்சூழலுக்குரிய இரண்டு தரப்பினரைக் குறிப்பிடுக.

ii. கரனின் வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ள, மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தரப்பினரைக் குறிப்பிட்டு, அத்தரப்பினர் இவ்வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணமொன்றை எழுதுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 03**

(1) நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புக்களை வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

(2) அ) மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக.
ஆ) சில்லறை வியாபாரியினால் நிறைவேற்றப்படும் சேவைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(3) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக.

i. நிலையான வைப்புச் சான்றிதழை எந்தவொரு நபருக்கும் சாட்டுதல் செய்ய முடியும்.

ii. வணிக வங்கியினால் அறவிடப்பட்ட காசோலைப் புத்தகக்கட்டணம், வங்கிக் கட்டணம் என்பன தொடர்பாக வங்கிக் கூற்றின் மூலமே வணிகர் அறிந்து கொள்ளலாம்.

iii. மோட்டார் வாகனம் ஒன்று ரூ 1500000 க்கு காப்புறுதி செய்யப்பட்டபோது ரூ 1000000 நட்டம் ஏற்படுமாயின் இழப்பீட்டுத்தொகை ரூ 1500000 பெற்றுக் கொள்ளமுடியும்.

iv. கண்டி - யாழ்ப்பாணம் அதிவேக பாதை ஒன்றை புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருத்தலானது போக்குவரத்தின் அடிப்படை மூலகங்களில் தரிப்பிடத்தைக் குறித்து நிற்கின்றது. (02 புள்ளிகள்)

(4) அ) தொடர்பாடல் செயன்முறையினை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
ஆ) பொருத்தமான தொடர்பாடல் ஊடகமொன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

(1) நிறுவனம் ஒன்று அரசின் பொலித்தீன் பாவனை தடைச் சட்டம் காரணமாக இலகுவில் உக்கக்கூடிய, சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பொலித்தீன்களை தயாரிக்க தீர்மானித்ததுடன் இதற்காக நவீன தொழில்நுட்பம் வாய்ந்த இயந்திரமொன்றை கொள்வனவு செய்ததுடன் அதற்கு தேவையான மனித வளத்தையும் திட்டமிட்டது. உற்பத்தி செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் தரக் கட்டுப்பாட்டாளரினால் உற்பத்திப் பொருளின் தரம் மதிப்பிடப்படுகின்ற அதேவேளை உற்பத்தி முகாமையாளரும் அவருக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர்.

முகாமைத்துவச் செயன்முறையில் காணப்படும் நான்கு கருமங்களையும் குறிப்பிட்டு அவ்வொவ்வொரு கருமங்களுக்கான உதாரணங்களை இச்சம்பவத்தில் இருந்து தெரிவு செய்து, கீழே தரப்பட்டுள்ளவாறாக அட்டவணையில் குறிப்பிடுக.

| முகாமைத்துவக் கருமம் | சம்பவத்தில் வழங்கப்பட்டுள்ள உதாரணங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(02 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

(2) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா?, பொய்யா எனக் குறிப்பிடுக.

i. உற்பத்திப் பொருளொன்று நுகர்வோனுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் செயன்முறையானது நிறைவடைந்து விடுகின்றது.

ii. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நியமங்களுக்கு அமைய நடவடிக்கைகள் இடம்பெறாவிடின் அதற்குரிய காரணங்களை தேடியறிந்து மீண்டும் திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நெறிப்படுத்தல் எனப்படும்.

iii. முதலீடு செய்வதன் மூலம் கம்பனியொன்றின் உரிமையாளர் ஒருவராவதற்கான தகைமை கிடைப்பது ஒரு கம்பனியில் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் ஆகும்.

iv. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அனைத்தும் கொழும்பு பங்குச் சந்தையில் பங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்.

(02 புள்ளிகள்)

(3) அ) முதலீட்டு வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) திறைசேரி உண்டியலில் முதலிடுவதன் அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(4) அ) முகாமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) வணிகத்தினால் இனங்காணப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நுகர்வோர் குழுவே இலக்கு சந்தையாகும். இதற்கமைய உம்மால் உமது சூழலில் இனங்காணப்பட்ட இலக்கு சந்தைக்கு இரண்டு உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி 11
## (கணக்கீடு)
## (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

**வினா 05**

(1) (அ) கணக்கீட்டின் நோக்கம் யாது?
(ஆ) சொத்தொன்றின் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(2) ஆகாஷ் காலணி விற்பனையகமொன்றை நடாத்தி வருகின்றார். அவரது வணிகத்தில் காணப்படும் கீழ்க்காட்டப்படும் உருப்படிகளை குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

| | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | நடைமுறைச் சொத்து | நடைமுறை அல்லாச் சொத்து | நடைமுறைப் பொறுப்பு | நடைமுறை அல்லா பொறுப்பு |
| 1. காலணிகளின் இருப்புக்கள் | | | | |
| 2. காசாளரால் பயன்படுத்தப்படும் காசுக் கணக்கிடல் இயந்திரம் | | | | |
| 3. வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக பெறப்பட்ட வங்கிக்கடன் | | | | |
| 4. கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட காலணிகளுக்கு செலுத்த வேண்டிய காசு | | | | |

(02 புள்ளிகள்)

(3) (அ) குமரன் என்பவர் 01.01.2017 இல் பலசரக்கு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்திருந்தார். அவரது வணிகத்தில் ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

1. மூலதனமாக இடப்பட்டது ரூ. 100 000
2. வங்கிக்கடன் பெற்றது ரூ. 25 000
3. காசுக்கு வாங்கிய தளபாடங்கள் ரூ. 30 000
4. கட்டிடத்திற்கு செலுத்திய வாடகை ரூ. 5 000
5. கடனுக்கு கொள்வனவு செய்த பலசரக்குகள் ரூ. 15 000

வேண்டப்படுவது:-



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

மேற்போந்த ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறிப்பிடுக. விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக. உங்களுக்காக முதலாவது கொடுக்கல் வாங்கல் பதிவு செய்து தரப்பட்டுள்ளது.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாளர் உரிமை மூலதனம் |
|---|---|
| 1. | காசு + 100000 மூலதனம் + 100000 |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

(02 புள்ளிகள்)

(ஆ) ஜனவரி முதல் வாரத்தின் இறுதியில் உள்ளவாறு குமரன் வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் பெறுமதிகளை வெவ்வேறாக குறிப்பிடுக.

01. நடைமுறையல்லாச் சொத்துக்கள்
02. நடைமுறைச் சொத்துக்கள்
03. மொத்தப் பொறுப்புக்கள்
04. உரிமையாண்மை

(02 புள்ளிகள்)

(4) கமல் வணிகத்தின் கடன் கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல | வழங்குனர்கள் | பட்டியலின்படி பெறுமானங்கள் |
|---|---|---|---|
| 2017.05.06 | 80 | ஆதித்யா | ரூ. 20 000 |
| 2017.05.13 | 85 | சகானா | ரூ. 15 000 |
| 2017.05.20 | 96 | ராகவன் | ரூ. 12 000 |
| 2017.05.25 | 107 | கண்ணன் | ரூ. 18 000 |

வேண்டப்படுவது:-

கமல் வணிகத்தின் கொள்வனவு நாட்குறிப்பைத் தயாரித்து பேரேட்டிற்கு மாற்றுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06.**

(1) (அ) வங்கிக் கூற்று என்றால் என்ன?

(ஆ) வங்கிக் கணக்கு இறுதி மீதியும், வங்கிக் கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்கான காரணம் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

(2) பெண்களுக்கான ஒரே வகையான கைப்பைகளை தயாரிக்கும் வணிகம் ஒன்றுடன் தொடர்புடைய 2017 யூன் மாதத்திற்கான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| உற்பத்தி செய்த அலகுகள் | 200 |
| நேர் செலவுகள் | ரூ. 40 000 |
| கைப்பைகளை விநியோகிப்பதற்கான செலவு | ரூ. 10 000 |
| ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயம் | ரூ. 300 |

கிரயத்தின் மீது 25% இலாப எல்லையுடன் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது.

வேண்டப்படுவது:

1. 2017 யூன் மாதத்திற்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம்
2. ஓர் அலகிற்கான விற்பனை விலை (02 புள்ளிகள்)

(3) அ) கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்தில் கொண்டு வைதேகி வணிகத்தின் 31.12.2017 இலுள்ள பரீட்சைமீதியைத் தயாரிக்குக.

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் | ரூ | 40000 |
| கட்டிடம் | ரூ | 150000 |
| கடன்கொடுத்தோர் | ரூ | 50000 |
| கொடுத்த கழிவு | ரூ | 5000 |
| கொள்வனவு | ரூ | 200000 |
| பெற்ற கழிவு | ரூ | 3000 |
| விற்பனைகள் | ரூ | 292000 |
| மூலதனம் | ரூ | 50000 |

(02 புள்ளிகள்)

www.agaram.lk

(ஆ) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் கூறுக.

i. மீள் விற்பனைப் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தல் தொடர்பாக பயன்படுத்தும் மூல ஏடு விற்பனை நாளேடாகும்.

ii. மூல ஆவணங்களைப் பயன்படுத்தியே மூல ஏடுகளில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

iii. வணிகமொன்றில் தொடர்ச்சியாக இடம்பெறும் சிறிய பெறுமானங்களுடன் கூடிய காசுக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்யும் மூல ஏடு காசேடு ஆகும்.

iv. வங்கிக் கூற்றில் காணப்படும் வரவு மீதி வங்கி மேலதிகப்பற்று ஆகும். (02 புள்ளிகள்)

(4) சூரியா வணிகத்தின் 2016.12.31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகைகள் சமப்படவில்லை. அது தொடர்பாக பின்வரும் கணக்கீட்டு வழுக்கள் இனங்காணப்பட்டன.

1. ரூ. 20 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியல்களுக்கான பதிவுகள் கணக்கேடுகளில் முற்றாக பதியாமல் விடப்பட்டிருந்தது.
2. ரூ 50 000 க்கு அலுவலகப் பாவனைக்கு வாங்கப்பட்ட பிரதி செய்யும் இயந்திரத்தின் கிரயம் கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. வங்கிக்கடன் மீளச் செலுத்தியது ரூ 20 000 காசேட்டில் மட்டுமே பதியப்பட்டுள்ளது.
4. மின்சாரக்கட்டணக் கணக்கு மீதியானது ரூ 8 000 பரீட்சைமீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

**வேண்டப்படுவது,**

1. மேற்காட்டப்பட்ட வழுக்களை திருத்துவதற்கான பொது நாட்குறிப்பேட்டை தயாரிக்கவும்.
2. தொங்கல் கணக்கைத் தயாரிக்குக.

(04 புள்ளிகள்)

**வினா இல 07**

(1) கேசவன் வணிகத்தின் 31.12.2016 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு.

1. மாதாந்த காப்புறுதிக் கட்டணம் ரூ. 2 500 ஆகும். வருடத்தினுள் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணத்தொகை ரூ 25 000 ஆகும்.
2. வணிகத்தை நடத்திச் செல்லும் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூ. 20 000 ஆகும். வருடத்தினுள் ரூ 200 000 வாடகை செலுத்தப்பட்டுள்ளது.
3. வணிகத்திற்குச் சொந்தமான காணியொன்று மாதாந்த குத்தகை ரூ. 15 000 வீதம் இன்னுமொரு வணிகமொன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. வருடத்தில் பெற்ற மொத்த குத்தகைத் வருமாத் தொகை ரூ. 150 000 ஆகும்.
4. வேறு வணிகமொன்றிற்கு மோட்டார் வாகனமொன்று ரூ. 4 000 மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அவ்வருடத்தினுள் பெற்ற மோட்டார் வாடகை வருமானம் ரூ. 40 000 ஆகும்.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல் | செலுத்த வேண்டிய செலவினத் தொகை | பெற வேண்டிய வருமானத் தொகை |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

(02 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(2) அறிவொளி வாசகர் சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 110 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 100 ஆகும். 31.12.2016 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பின்வரும் தகவல்கள் சங்கத்தின் பொருளாளரால் வழங்கப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் | 10000 |
| மின்சாரக் கட்டணம் | 3000 |
| பழைய பத்திரிகை விற்பனையால் பெற்ற காசு | 4000 |
| நீர்க் கட்டணம் | 1500 |
| சம்பளங்கள் | 10000 |
| வாசிப்போர் மீது விதித்த தண்டப் பணம் | 500 |
| பத்திரிகைக் கொள்வனவு | 3000 |
| பெற்ற நன்கொடை | 5000 |
| தளபாடம் உபகரணம் கொள்வனவு | 10000 |

❖ மின்சாரக் கட்டணத்தில் ரூ 500 இன்னும் செலுத்தப்படவில்லை.

**வேண்டப்படுவது,**

❖ அறிவொளி வாசகர் சங்கத்தின் 31.12.2016 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்றினைத் தயாரிக்க. (02 புள்ளிகள்)

(3) ஹரினி வியாபார நிறுவனத்தின் 31.12.2016 இல் உள்ளபடியான பரீட்சைமீதி கீழே தரப்படுகின்றது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 300 000 |
| ஆரம்ப இருப்பு 01.01.2016 இல் | 10 000 | |
| கொள்வனவு | 200 000 | |
| விற்பனைகள் | | 410 000 |
| இயந்திரம் | 80 000 | |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கம் 01.01.2016 இல் இயந்திரம் | | 8 000 |
| 20% வங்கிக் கடன் | | 50 000 |
| வங்கிக் கடன் வட்டி | 5 000 | |
| கடன்பட்டோர் | 56 000 | |
| கடன்கொடுத்தோர் | | 45 000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 15 000 | |
| காப்புறுதிக் கட்டணம் | 12 000 | |
| கொடுத்தகழிவு | 5 500 | |
| பெற்றகழிவு | | 6 500 |
| காணிகட்டிடம் | 500 000 | |
| உட்சுமைகூலி | 3 000 | |
| காசுமீதி | 33 000 | |
| | 819 500 | 819500 |

**மேலதிக தகவல்கள்:**

1. இறுதியிருப்பு ரூ 15 000.
2. இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத் தேய்விடுக.
3. கடன்பட்டோரில் ரூ. 2 000 அறவிட முடியாக் கடனாக பதிவழிக்குக.

**வேண்டப்படுவது:**

❖ 31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)
❖ 31.12.2016 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று (04 புள்ளிகள)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk